**பல்கலைக்கழக சேமலாப நிதியம் - 2014**

பல்கலைக்கழக சேமலாப நிதியத்தின் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக்கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச்செயலாற்றல் கூற்று, உரிமை மூலதன மாற்றங்கள் கூற்று, காசுப் பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களையும் உள்ளடக்கிய 2014 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1978 இன் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் அதிகாரச்சட்டத்தின் 12 ஆம் உப பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(3) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. பல்கலைக்கழகங்கள் அதிகாரச்சட்டத்தின் 12(5) ஆம் பிரிவின் பிரகாரம் நிதியத்தின் ஆண்டறிக்கையுடன் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இவ்வறிக்கையில் காணப்படுகின்றன.

## 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந் நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

## 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000 - 1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்க நெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் நிதியத்தினால் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி நிதியத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக கருத்தில்கொள்ளவில்லை. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 அபிப்பிராயம்

நிதிக்கூற்றுக்களானவை, பல்கலைக்கழக சேமலாப நிதியத்தின் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 2.2.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

(அ) 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 6,903,570 தொகையான இனங்காணப்படாத பங்களிப்புத் தொகை 2014 ஆம் ஆண்டின் போதும் இனங்காணப்படாதிருந்ததுடன், மீளாய்வாண்டில் அப்பெறுமதி ரூபா 6,954,807 வரை அதிகரித்திருந்தது. மேற்குறித்த பெறுமதி இறுதிக் கணக்குகளில் கோரப்படாத நலன் ஒதுக்கத்திற்கு செலவு வைக்கப்பட்டிருந்தது. (Unclaimed Benefits Reserve)

(ஆ) சேமலாப நிதியத்தின் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 40,352,106 தொகை செயற்பாடற்ற அங்கத்தவர் மீதியொன்றைக் காண்பித்ததுடன், அம்மீதியில் உள்ளடக்கப்பட்ட உடன்படிக்கை மீறியமைக்காக நிறுவகத்திற்கு கிடைக்க வேண்டிய பண அளவினை இனங்கண்டு கணக்குகளில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே செயற்பாடற்ற அங்கத்தவர்களுக்காக மீளாய்வாண்டிற்காக ரூபா 5,875,548 வட்டியாக கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

### 2.3 செலுத்த வேண்டிய கணக்குகள்

மீளாய்வாண்டின் இறுதியில் ரூபா 26,351,592 கூட்டுத்தொகையான செலுத்த வேண்டிய சேமலாப நிதிய (Refunds Payable) மீதியினுள் 01 ஆண்டு முதல் 13 ஆண்டு வரை காலவதியான செலுத்த வேண்டிய சேமலாப நிதிய மீதி ரூபா 24,373,385 ஆக இருந்தது. இத்தொகையை தீர்வு செய்வதற்கு முறையான நடைமுறையொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

பின்வரும் இணக்கமின்மைகள் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் போன்றவற்றுடனான தொடர்பு | இணங்காமைகள் |
|---|---|
| (அ) 1978 இன் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் அதிகாரச்சட்டத்தின் 92(3) ஆம் பிரிவு | வருடாந்த கலப்பு வட்டி வீதத்தை தீர்மானித்தல், நிதி விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரின் அங்கீகாரத்துடன் உரிய அமைச்சரின் தீர்மானத்தின் அடிப்படையில் மற்றும் வழிகாட்டி ஏற்பாடுகளுக்கு உட்பட வேண்டிய போதிலும், 2014 ஆம் ஆண்டில் வட்டி விகிதம் தொடர்பாக நிதி அமைச்சரின் அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) 2014 திசெம்பர் 29 ஆந் திகதிய 06/2014 ஆம் இலக்க ஆணைக்குழு நிதிச்சுற்றறிக்கை | 2014 நவம்பர் மாதத்திற்குரிய பங்களிப்புத் தொகை மற்றும் கடன் தவணைப் பட்டியல் 2014 திசெம்பர் 15 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னரும், 2014 |

| | |
|---|---|
| | திசெம்பர் மாதத்திற்குரிய பங்களிப்புத் தொகை மற்றும் கடன் தவணைப் பட்டியல் 2015 சனவரி 15 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவிற்கு கிடைக்க வேண்டிய போதிலும், 9 நிறுவனங்களுக்குரிய ரூபா 8,696,900 ஆன பங்களிப்புத் தொகை மற்றும் ரூபா 1,113,350 ஆன கடன் தவணை தொடர்பான பட்டியல் குறித்த காலப்பகுதியினுள் சேமலாப நிதியத்திற்கு வழங்கப்பட்டிருக்க வில்லை. |
| (இ) 2001 பெப்ரவரி 02 ஆந் திகதிய 03/2001 ஆம் இலக்க ஆணைக்குழு நிதிச்சுற்றறிக்கை | குறித்த மாதத்திற்குரிய சேமலாப பங்களிப்புத் தொகை அடுத்த மாதத்தின் 10 ஆந் திகதிக்கு முன்னர் அல்லது அத்தினத்தில் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவிற்கு கிடைக்க வேண்டிய போதிலும், தெரிவுப் பரிசோதனையின் பிரகாரம் ஐந்து மாதங்களுக்குரிய பங்களிப்புத் தொகை சேமலாப நிதியத்திற்கு கிடைக்கப்பெறாதிருந்த 35 சந்தர்ப்பங்கள் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டன. |
| (ஈ) 2007 ஒக்தோபர் 27 ஆந் திகதிய 45 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 3 ஆம் பந்தி | நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் சமர்ப்பித்தல் தொடர்பான பொறுப்புக் கூற்றொன்று சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும், அவ்வாறான கூற்றொன்று சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |

## 3. நிதி மீளாய்வு

### 3.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2014 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதியத்தின் செயற்பாட்டு நடவடிக்கைகளின் விளைவுகள் ரூபா 2,541,161,941 மிகையாக இருந்ததுடன், அதற்கு உடனொத்த முன்னைய ஆண்டில் ரூபா 2,259,182,079 மிகையொன்றானமையால் நிதி விளைவுகளில் ரூபா 281,979,862 தொகையான அதிகரிப்பொன்று அவதானிக்கப்பட்டது. மீளாய்வாண்டின் தேறிய முதலீட்டு வருமானம் ரூபா 274,779,176 ஆல் அதிகரித்தமை நிதி விளைவுகளின் அதிகரிப்பிற்கு பிரதானமாகத் தாக்கமளித்திருந்தது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 முகாமைத்துவ செயற்திறனின்மை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 03 பல்கலைக்கழகங்களில் மேற்கொள்ளப்பட்ட தெரிவுப் பரிசோதனையின் போது உடன்படிக்கைகளை மீறிய உத்தியோகத்தர்களிடமிருந்து பல்கலைக்கழகத்திற்கு அறவிட வேண்டிய பிணைமுறிகளின் பெறுமதி ரூபா 78,289,363 ஆக இருந்ததுடன், குறித்த உத்தியோகத்தர்களிடமிருந்து ரூபா 51,269,542 ஆன சேமலாப மீதி காணப்பட்ட போதிலும், மேற்குறித்த பணத்தை அறவிடுவதற்கு மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மொறட்டுவ பல்கலைக்கழகத்தின் 03 அங்கத்தவர்களிடமிருந்து உடன்படிக்கைகளை மீறியமையால் ரூபா 13,787,699 தொகை அறவிடப்பட வேண்டியுள்ள போது அந்த உத்தியோகத்தர்களுக்கு உரித்தான சேமலாப நிதியம் விடுவிக்கப்பட்டிருந்ததுடன்,

அறவிடப்பட வேண்டிய மீதிகளை அறவிடுவதற்காக கணக்காய்வு திகதி வரையிலும் சட்டரீதியான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) நிலுவை வாழ்க்கைச் செலவினங்களை தீர்ப்பதற்காக 2012 மற்றும் 2014 ஆம் ஆண்டுகளில் திறைசேரியிடமிருந்து கிடைக்கப்பெற்ற ரூபா 171.7 மில்லியன் தொகை குறித்த நிலுவை வாழ்க்கைச் செலவின படிகள் கணக்கிடப்பட்டு பல்கலைக்கழக சேமலாப நிதியத்தின் அங்கத்தவர் கணக்கிற்கு செலவு வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. பல்கலைக்கழகங்களினால் இது தொடர்பான தகவல்களை சமர்ப்பிப்பதில் தாமதம் காரணமாக குறித்த அங்கத்தவர்களுக்கு பணத்தை செலவு வைப்பதற்கு முடியாதிருந்ததாக நிதியத்தின் தலைவரால் கணக்காய்விற்கு அறிக்கையிடப்பட்டிருந்தது.

## 5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 5.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

1977 ஆகஸ்ட் 16 ஆம் திகதிய 836 ஆம் இலக்க திறைசேரி சுற்றறிக்கையின் (அ) பந்தியின் பிரகாரம் சட்டத்தின் கீழ் ஏற்படுத்தப்பட்ட நிதியத்திற்காக வருடாந்த பாதீடு தயாரிக்கப்பட வேண்டிய போதிலும், மேற்குறித்த சுற்றறிக்கையின் பிரகாரம் வருடாந்த பாதீடு தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

## 6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகளிலுள்ள குறைபாடுகள் அவ்வப்போது நிதியத்தின் செயலாளரின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டு அம்சங்கள் தொடர்பாக விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) அங்கத்தவர் நிதிய நிர்வாகம்
(ஆ) பாதீட்டுக் கட்டுப்பாடு